ஜுன் 15 இல் கோவையில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் முப்பெரும் விழா!

# தஞ்சை வடக்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர்!

## மாவட்டச் செயலாளர் - சு.கல்யாணசுந்தரம் எம்.பி. வேண்டுகோள்!



தஞ்சாவூர், ஜுன் 12-

ஜுன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்துக் கொள்ளும் "முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்" தஞ்சை வடக்கு மாவட்ட திமுக சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்துக்கொள்ள வேண்டுமென மாவட்ட தி.மு.க. செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அது வருமாறு :

வருகின்ற ஜுன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என நடைபெறும் "முப்பெரும் விழா பொதுக் கூட்டத்தில்" தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

அதுசமயம், அக்கூட்டத்தில் தஞ்சை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பேரூராட்சி மன்ற தலைவர்கள், மண்டலக்குழு நிலைக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக் குழு உறுப்பினர்கள், மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக் குழு, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி , அமைப்புச்சார ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள். வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கியும் மற்றும் அத்தாணி, ஓடைமேடு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் சத்துணவு அமைப்பாளராக எஸ்.மகேஸ்வரி என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணையையும் வழங்கினார். கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநகராட்சி ஆணையாளர் சிவகிருஷ்ணமூர்த்தி , மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், உதவி ஆட்சியர் பயிற்சி ராமகிருஷ்ண சாமி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! டி.எஸ்.பி. இராஜகோபால் தலைமை!

# அம்பத்தூர் தெற்குப் பகுதியில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

## திருச்சி என். சிவா எம்.பி. - வழக்கறிஞர் உ.வாசுகி - பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் சிறப்புரை!

சென்னை, ஜுன் 12-

சென்னை கிழக்கு மாவட்டம், அம்பத்தூர் தெற்குப் பகுதி தி.மு.க சார்பில் "காலம் உள்ள வரை கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா - 2024 சார்பில் கலைஞர் 100 - 90 "தமிழ் அறம் கலைஞர் தந்த வரம்" எனும் நிகழ்ச்சி இன்று (12.06.2024,புதன்கிழமை) மாலை 6.00 மணிக்கு பாடி யாதவாள் தெருவில் அம்பத்தூர் தெற்குப் பகுதி செயலாளர் டி.எஸ்.பி. இராஜகோபால் தலைமையில் நடைபெறுகிறது.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், மண்டல குழுத் தலைவர் பி.கே. மூர்த்தி எம்.சி., அம்பத்தூர் கிழக்குப் பகுதிச் செயலாளர் எம்.டி.ஆர். நாகராஜ், எல்.பி.எப். மோகன், டாக்டர் ஏ.பி. பூர்ணிமா, ரமேஷ் (எ) நீலகண்டன், டாக்டர் ஜி. சாந்தகுமாரி, ஜெ. பாலமுருகன், ஜி.வி.நாகவள்ளி, கு.கிருஷ்ணமூர்த்தி, து. ஆயிரம், மு.நடராஜன், து.செல்வராஜ், ஆர்.கதிரவன், கவிதாசெல்லதுரை, கு.சங்கர்,

வட்டக் கழகச் செயலாளர்கள்: சி. சீனிவாசன், எம்.இ.சேகர் எம்.சி., ந. நெப்போலியன், இரா. டீக்கா, மாமன்ற உறுப்பினர்கள் எஸ். உமா எம்.சி., உஷாநாகராஜ் எம்.சி., கே.பொற்கொடி எம்.சி., எம். கமல் எம்.சி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அம்பத்தூர் தெற்குப் பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: பொ. சேதுராமன் (எ) பொன் சேட்டு, ஏ.கே. டி. பாஸ்கர், பா. மாறன், டி.சுரேஷ் பாபு, ஆர்.ஜெயராமன், சோ. மதியழகன், எஸ். கே. சதீஷ்குமார், எஸ். எஸ். சவரிமுத்து, எஸ். எம். முருகானந்தம், ஏ.வி. தட்சிணாமூர்த்தி ஆகியோர் வரவேற்கின்றனர்.

கழக கொள்கை பரப்பு செயலாளர்- கழக மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி என். சிவா, வழக்கறிஞர் உ.வாசுகி, பேராசிரியர் கு.ஞானசம்பந்தம் ஆகியோர் புகழுரையாற்றுகின்றனர்.

கழகத் துணை அமைப்புச் செயலாளர் ப. தாயகம் கவி எம்.எல்.ஏ., அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ., அம்பத்தூர் தொகுதி பொறுப்பாளர் பி.டி.சி. செல்வராஜ் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசுகின்றனர்.

கழக மாநில நிர்வாகிகள் ப. ரங்கநாதன், கே.சந்துரு, கே.எஸ்.ரவிச்சந்திரன், சங்கரி நாராயணன், தமிழன் பிரசன்னா, எஸ். மணிமுடி, வே. உமாகாந்த், கே.எஸ். எம். நாதன், எம். விஜயகுமார், என்.பி.எம் ஷேக் அப்துல்லா, சி.மகேஷ்குமார், பரிதி இளம் சுருதி, ஆர்.வரதன்.

மாவட்ட நிர்வாகிகள் கோ. ஏகப்பன், தேவஜவகர், ஜி. மகாதேவன், புனிதவதி எத்திராசன், இசட். ஆசாத், மண்டல குழு தலைவர்கள் கூ.பீ. ஜெயின், சரிதா மகேஷ்குமார்,ஸ்ரீ ராமலு, பகுதி செயலாளர்கள் வே. வாசு, ஐ.சி.எப்.

வ.முரளிதரன், எ.நாகராசன், சொ.வேலு, வி. சுதாகர், எம். சாமிகண்ணு, செ. தமிழ்வேந்தன், எஸ். ராஜசேகர், எஸ்.முரளி,

பொதுக்குழு உறுப்பினர்கள் கோ. மணி, எஸ். பன்னீர்செல்வம், டி. வி. செம்மொழி, பி.ஜெ. துளசிங்கம், பி. உதயசங்கர், சாவித்திரிவீரராகவன், எம். இப்ராஹிம்கனி, அ. நிர்மலாதேவி, இரா. கலைச்செல்வி மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் சி. மகேஷ்குமார், டி. லோகேஷ், பா. ஜெகதீஷ், க. வினோத், ஜி.ஜெ.பிரபு, எஸ். தனசேகர், ஆர்.டி. சங்கர்நானா, வானவில்விஜய், நா. துலுக்காணம், ஜி. தாமோதரன், துரைகண்ணன், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரிஸ்ரீதர், பி. விஜயகுமார், எம். பெரோஸ் கான், எம். விநாயகம், ஆர். எஸ். சித்திக், க. பா. பிரதீப் குமார், ம. அசோக்குமார், எல், சம்பத்குமார், கா. ராஜ் முகமது. இரா.வீரமணி,

அம்பத்தூர் வடக்கு, கிழக்கு பகுதி வட்டக் கழக செயலாளர்கள் வி. ரவீந்திரன், பு. வீரா, வெ. ராதா கிருஷ்ணன், மு. ரகு, த, கண்ணபிரான், மு. சண்முகம், ஆ. சுந்தர்ராஜ், சீ. லோகநாதன், சு.மோகன் குமார், மு. விஜயகுமார், த.வ.லால்,

அம்பத்தூர் வடக்கு, கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள்: மா. பச்சையப்பன், அ.செல்வம், க.முரளிபாபு, க. கதீஜா, மா. ரமேஷ், து. ஜெகநாதன், பி.ஆர். இளங்கோவன், பா.பொற்செழியன், ரா.லட்சுமி ரங்கசாமி, மேனாம்பேடு இ. ராமு,

மாவட்ட பிரதிநிதிகள்: பொன். நவராஜ்ரவி, எம். குணசேகரன், ப. மதி, ஆ.இரா.அருண், கோ. சேகர்லால், க.ஜீவா, எஸ். பி. அரிகிருஷ்ணன், மா. குப்புசாமி, எம். ஹரிகிருஷ்ணன், பி.வி.மூர்த்தி, கே.செல்வம்,கோ.முத்துக் குமாரசாமி, கோ. ராஜ்குமார், ந.குமரவடி வேல், ச.கோதண்டன், கோ.இன்பசேகரன், ஆர். விமலன், ஜெ.ஐயப்பன், எஸ். பரமசிவம், தொகுதிக்குட்பட்ட BLA -2 பாகநிலை முகவர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், BLC முகவர்கள், கழக முன்னோடிகள் உள்பட பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர்.

வட்டச் செயலாளர் த. பிரகாஷ்குமார் நன்றி கூறுகிறார்.

# முன்னாள் முதல்வர் ஆர்.வீ. ஜானகிராமன் நினைவு நாள்!

## இரா. சிவா தலைமையில் தி.மு.க.வினர் நினைவஞ்சலி!

புதுவை, ஜுன் 12-

புதுச்சேரி மாநில முன்னாள் முதல்வர் ஆர்.வீ. ஜானகிராமன் அவர்களின் 5-ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று முன்தினம் அனுசரிக்கப்பட்டது. ஆம்பூர் சாலையில் உள்ள அவரது இல்லத்தில் அலங்கரித்து வைக்கப்பட்ட ஜானகிராமன் திருவுருவப் படத்திற்கு தி.மு.க. அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா தலைமையில் தி.மு.க.-வினர் மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து நெல்லித்தோப்பு தொகுதி செயலாளர் செ. நடராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் சார்பில், சாரம் - லெனின் வீதி சந்திப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நினைவேந்தல் நிகழ்ச்சியில், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா மலரஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து பெண்களுக்கு புடவைகள், ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிகளில், அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், துணை அமைப்பாளர் வி.அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., பொருளாளர் இரா. செந்தில்குமார் எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத், எம்.எல்.ஏ., துணை அமைப்பாளர் அ.தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ. மூர்த்தி, ஜே.வி.எஸ். ஆறுமுகம், ப.காந்தி, தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ். கோபால், பா.செ. சக்திவேல், வெ. ராமசாமி, அமுதாகுமார், நர்கீஸ் மற்றும் தொகுதி செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், தொண்டர்கள் பங்கேற்று நினைவஞ்சலி செலுத்தினார்கள்.

# செஞ்சியில் அரசு பள்ளியில் படிக்கும் பள்ளி மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள்

## விஜயகுமார் - மொக்தியார் அலி மஸ்தான் வழங்கினர்

செஞ்சி, ஜுன் 12-

தமிழ்நாட்டில் பள்ளி இறுதி தேர்வு முடிந்து கடந்த ஏப்ரல் மாதம் 25ஆம் தேதி முதல் கோடை விடுமுறை பள்ளிகளுக்கு விடப்பட்டது தொடர்ந்து ஜுன் 10ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் எனதமிழ்நாடு அரசு அறிவித்ததை அடுத்து நேற்று முன்தினம் பள்ளிகள் திறக்கப்பட்டன.

அந்த வகையில் விழுப்புரம் மாவட்டம் செஞ்சி மேல்மலையனூர் தாலுகாவில் உள்ள அனைத்து பள்ளிகளும் நேற்று முன்தினம் திறக்கப்பட்டது.

செஞ்சி சக்கராபுரம் அரசு நடுநிலைப் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு விலையில்லா புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு திண்டிவனம் மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் செல்வகுமார் தலைமை தாங்கினார் .வட்டார கல்வி அலுவலர்கள் சிவகுமார், புருஷோத்தமன், முன்னிலை வகித்தனர். பள்ளி தலைமை ஆசிரியர் ஷேக் மூசா அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ-மாணவிகளுக்கு அனைத்து வகை புத்தகங்கள் பயிற்சி ஏடுகள் உள்ளிட்ட கல்வி உபகரண பொருட்களை வழங்கினர்.

மேலும் தொடக்கப் பள்ளி நடுநிலைப் பள்ளிகளில் நடைபெறும் ஆதார் பதிவு சிறப்பு மையத்தையும் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

நிகழ்ச்சியில்மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெயச்சந்திரன்,வட்டார வள மைய்ய மேற்பார்வையாளர் கோவிந்தராஜ்,பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜலட்சுமி செயல்மணி, பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் நூர்ஜகான் ஜாபர், மகாலட்சுமி கமலநாதன்,பொன்னம்பலம், சுமித்ரா சங்கர், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் மாணிக்கம்,உள்ளிட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக செஞ்சி ராஜா தேசிங்கு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, காந்தி பஜார் அரசு நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பள்ளிகளுக்கு வருகை தந்த 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணவ-மாணவிகளுக்கும் விலையில்லா பாட புத்தகங்கள், பயிற்சி ஏடுகள் எண்ணும் எழுத்தும் பயிற்சி ஏடுகள் உள்ளிப்ப அனைத்து வகை கல்வி உபகரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

# பள்ளி சீருடை வழங்கும் திட்டம் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜுன் 12-

கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர். காந்தி அவர்கள் தலைமையில் பள்ளி சீருடை வழங்கும் திட்டம் மற்றும் இதர திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தான ஆய்வு கூட்டம் தலைமைச் செயலகத்தில் 07.06.2024 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 2024-2025-ஆம் ஆண்டிற்கு சமூக நலத் துறைக்கு விநியோகிக்கப்பட வேண்டிய இரண்டு இணை, பள்ளி சீருடை துணிகள் விநியோக முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார். மேலும் கடந்த ஆண்டு சட்டமன்ற பேரவை அறிவிப்புகள் மீதான தொடர் நடவடிக்கை மற்றும் நிறைவேற்றப்பட வேண்டிய அறிவிப்புகள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்தும், துணிநூல் துறையில் செயல்படுத்தப்படும் சிறிய அளவிலான ஜவுளி பூங்காக்கள் மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள ஜவுளி நகரம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது:-

2024-2025-ஆம் ஆண்டிற்கு சமூக நலத் துறைக்கு விநியோகிக்கப்பட வேண்டிய 237.36 இலட்சம் மீட்டர் துணிகளில் நாளது தேதி வரையில் 149.65 இலட்சம் மீட்டர் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. சமூக நலத் துறைக்கு தினசரி துணிகள் விநியோகம் செய்யப்படும் அளவினை அதிகரித்து எதிர் வரும் 20.06.2024க்குள் இரண்டு இணைக்கான துணிகள் முழுமையாக வழங்கப்படும்.

பொங்கல் 2025க்கான வேட்டி, சேலை வழங்கும் திட்டத்திற்காக, சேலைகள் மற்றும் வேட்டிகளின் மாதிரியினை உற்பத்தி செய்து அதன் முழுவிலை பட்டியல் விவரத்துடன் அரசுக்கு அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசின் திட்டங்கள் குறித்த நேரத்தில் மக்களை சென்றடையும் வகையில் நடவடிக்கைகள் மற்றும் பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இவ்வாய்வுக்கூட்டத்தில் தர்மேந்திர பிரதாப் யாதவ், அரசு முதன்மை செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, இரா.ஆனந்தகுமார், மேலாண்மை இயக்குனர், கோ-ஆப்டெக்ஸ், மா.வள்ளலார், துணிநூல் ஆணையர் மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.



புதுச்சேரி மாநில முன்னாள் முதல்வர் ஆர்.வீ.ஜானகிராமன் அவர்களின் 5–ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று முன்தினம் அனுசரிக்கப்பட்டது. ஆம்பூர் சாலையில் உள்ளது அவரது இல்லத்தில் அலங்கரித்து வைக்கப்பட்ட ஜானகிராமன் திருவுருவப் படத்திற்கு தி.மு.க. அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா தலைமையில் தி.மு.க.வினர் மலரஞ்சலி செலுத்தினர்.



கோவை தெற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 101வது பிறந்தநாள் விழா மற்றும் தமிழகம் முழுவதும் நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் 40/40 தொகுதிகளிலும் வெற்றி பெற்றதை முன்னிட்டு பொள்ளாச்சி சுந்தரம் லே அவுட் தளபதி இல்லம் முன்பு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் தலைமையில் பொள்ளாச்சி நகர மன்ற துணை தலைவர் கௌதமன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளரும் நகர மன்ற உறுப்பினருமான பி.ஏ.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் திருமலைராஜா வரவேற்புரையில் நடைபெற்றது. நிகழ்ச்சியை கழக சட்டதிட்ட திருத்தக்குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் பொதுமக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கி துவக்கிவைத்தார். நிகழ்வில் மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு துணை தலைவரும் நகர மன்ற உறுப்பினருமான மாணிக்கராஜ், நகர மன்ற உறுப்பினர்கள் மணிமாலா தென்றல், சண்முகபிரியா சதீஷ், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் ஜெயக்குமார், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் சதீஷ், வட்ட செயலாளர் ஜெகதீஷ், நகர ஆதிதிராவிட நலக்குழு துணை அமைப்பாளர் லோகநாதன், வட்ட பிரதிநிதி லேத் சுப்பிரமணியம், நகர மாணவரணி துணை அமைப்பாளர் மகேந்திரன், கௌதம், காய்கறி பாலன், இரும்பு மனோஜ், குமரன்நகர தம்பி, மாணவரணி கோட்டாம்பட்டி நவீன், சபரி துரை, மாரிமுத்து, சுதீஸ் ராஜ்கோ, கோகுல் ராஜ்குமார் , சுபாஷ் மற்றும் பலர் கலந்துகொண்டனர். இறுதியில் வருகை தந்த அனைவருக்கும் வட்டச் செயலாளர் பூவை செல்வராஜ் நன்றி கூறினார்.



நாகை மாவட்டம் நாகை காடம்பாடி நகராட்சி நடுநிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் மாணவ, மாணவிகளுக்கு பாடநூல் குறிபேட்டினை நாகை மாவட்டக் கழகச்செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானிடாம் வர்கீஸ் ஆகியோர் வழங்கினார்கள். உடன் கீழ்வேளூர் சட்ட மன்ற உறுப்பினர் நாகைமாலி, நாகை நகரக் கழகச் செயலாளரும், நகர்மன்ற தலைவருமான இரா.மாரிமுத்து, நகர்மன்ற உறுப்பினர் சுரேஷ், நகரக் கழக பொருளாளர் அபுபக்கர் ஆகியோர் உள்ளனர்.